<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>

<u>அ.வ.எண்.302/2023</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் நாள் புதன்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஈஸ்வரி | தொழில் | |
| த/பெ | பாலசுப்பிரமணி | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| | | மாவட்டம் | |

<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. 1, 2 வாதிகள் என்னுடைய சகோதரிகள். நாங்கள் கிரையம் பெற்ற சொத்தில் பிரதிவாதிகள் தங்களுக்கும் உரிமை உள்ளது என்று பிரச்சனை செய்ததால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். என்னுடைய தாத்தா பெயர் பெரியசாமி கவுண்டர். பெரியசாமி கவுண்டருக்கு வள்ளியாத்தாள் மற்றும் ராமசாமி கவுண்டர் ஆகியோர் வாரிசுகள் மேற்படி ராமசாமி கவுண்டர் என்னுடைய அப்பா வள்ளியாத்தாள் என்னுடைய அத்தை. பிரதிவாதிகள் என்னுடைய அத்தையின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் வடுகபாளையம் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு நினைவில்லை. மொத்தம் ஐந்து காலைகளில் எங்களுக்கு பாத்தியம் உள்ளது என்று குறிப்பிட்டு நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி சொத்துக்கள் பெரியசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல சோமசுந்தரம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். வா.சா.ஆ.1 என்ன ஆவணம் என்று எனக்கு நினைவில்லை.

2. 1982 ஆம் வருடத்திய பத்திரப்படி மேற்படி சொத்து என்னுடைய தாத்தா பெரியசாமி கவுண்டருக்கு பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்ட சொத்து என்று

சொன்னால் சரிதான். மேற்படி சொத்து என்னுடைய அப்பாவுக்கும் அத்தைக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. 1970ம் வருடம் என்னுடைய அப்பா என்னுடைய அத்தைக்கு ரூபாய் 30,000 பணம் கொடுத்த விபரத்தை என்னுடைய அப்பா நான் 15 வயது இருக்கும் போது என்னிடம் சொன்னார். என்னுடைய அத்தை தாவா சொத்தில் அவருடைய உரிமையை விட்டுக் கொடுத்து ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் அதை நான் என்னுடைய வழக்கறிஞர்கள் கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணம் எந்த வருடம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. அதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். என்னுடைய தந்தை என்னுடைய தாத்தாவுக்கு 1982 ஆம் வருடம் ரூபாய் ஒரு லட்சம் தொகையை கொடுத்தார். அவ்வாறு ஒரு லட்ச ரூபாய் ஒப்படைத்ததற்கு எந்தவிதமான ஆவணத்தையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நானும் என்னுடைய சகோதரிகளும் என்னுடைய தகப்பனாருக்கு இரண்டாவது தாரத்தின் மக்கள் என்று சொன்னால் சரிதான்.

3. பிரதிவாதிகள் அசல் வழக்கு எண். 393/2010 என்ற வழக்கை என்னுடைய அப்பாவின் சொத்துக்களில் பாகம் உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்தார்கள். மேற்படி வழக்கு ரத்து செய்யப்பட்டுவிட்டது. என்னுடைய அப்பாவின் சொத்து நீதிமன்றத்தின் மூலம் ஏலம் விடப்பட்டதால் மேற்படி வழக்கு ரத்து செய்யப்பட்டுவிட்டது. 05.03.1991ல் மேற்படி சொத்தை சோமசுந்தரம் ஏலத்தில் வாங்கிவிட்டார். அதனால் 2013 ஆம் வருடம் தாக்கல் செய்த வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். மேற்படி வழக்கில் என்னுடைய அப்பா மேற்படி சொத்தில் பாகம் தருவதாக சொன்னதன் அடிப்படையில் மேற்படி வழக்கு வாதிகளால் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் சொத்தை என்னுடைய அப்பா பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 23.11.2012 தேதியில் பிரதிவாதிகளுக்கு ரூபாய் 75 ஆயிரம் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் அதை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம்.

அது என்ன ஆவணம் என்று நினைவில்லை.

4. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி தொகை பட்டக்காரர், சிறு ஜனத்தலைவர் வெங்குடுசாமி முன்னிலையில் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய தந்தை 02.09.2014 ஆம் தேதி இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்தார் என்று சொன்னால் சரிதான். 11.02.2014 தேதியில் என்னுடைய தகப்பனார் சொத்துக்களை புஷ்பலதா பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் என்னுடைய தாத்தா பெரியசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல சோமசுந்தரத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றாலும் அதில் என்னுடைய தகப்பனாருக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை பிரதிவாதிகளுக்கும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பிரதிவாதிகளும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தந்தை என்னுடைய தாத்தாவுக்கு பணம் கொடுத்ததாக நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு உண்மையிலேயே பணம் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களிடமிருந்து பாக பாத்திய விடுதலைப் பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா சொத்துக்கு சோமசுந்தரத்திற்கு பாத்தியப்பட்டதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல தாவா சொத்துக்கள் பெரியசாமிக்கு பாத்தியப்பட்டு அவருக்கு பிறகு என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எப்படி சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு பாகம் கொடுக்காமல் எனது தகப்பனார் என் பெயரிலும் மற்ற வாதிகள் பெயர்களிலும் எழுதி வைத்த எந்த ஆவணமும் செல்லதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நானும் என்னுடைய சகோதரிகளும் செய்து கொண்ட செட்டில்மெண்ட் ஆவணம் பிரதிவாதிகளுக்கு

தாவா சொத்தில் உள்ள உரிமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 05.01.2021 தேதியில் வாதிகள் தாவா சொத்தில் என்னுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்தார்கள் என்று ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அதற்கான ஆவணத்தை வழக்கறிஞர் கொடுத்துள்ளேன். அவ்வாறு எந்தவிதமான புகார் என்னால் கொடுக்கப்படவில்லை என்றாலும் தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருப்பதால் அதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. அவர்களுக்கு தாவா சொத்தில் உரிமை இருப்பதால் தாவா சொத்தில் அவர்கள் அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல அவர்களுக்கு தாவா சொத்தில் எந்த சொத்து உரிமையும் இல்லை. அசல் வழக்கு எண் 56/1978 வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல.தாவா சொத்தில் பதிவாதிகளுக்கு பாத்தியம் உள்ளது என்றாலும் அதை மறைத்து தாவா சொத்தில் முழு உரிமையும் எங்களுக்கு உள்ளது என்றாலும் நாங்கள் வழக்கு தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.20 18:37:16 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.